# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 16.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1646/SCIC/2023**

திரு.க.சுரேஷ்பாபு, த/பெ.ஆர்.கண்ணன்
226, கோவிந்தராஜபுரம் (விரிவாக்கம்) புகார்தாரர்
தாம்சன்பேட்டை,
காவேரிப்பட்டணம் - 635 112
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ....... பொதுஅதிகார அமைப்பு
வட்டாட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 25.03.2023 |
| 2. | மனுதாரரின் புகார் மனு | 03.05.2023 |
| 3. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 16.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “தங்களது துறையின் செயல்பாடுகள் மற்றும் பணிகள் பற்றிய விபரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம்-2005 பிரிவு 4(1)(b)(i)-ன் கீழ் வழங்க வேண்டுகிறேன்” என்பன போன்று 16 (பதினாறு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (16/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எவ்வித கடிதமும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள்) விதி-7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அன்னாரது வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி / செல்வி.C. வசந்தி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் அவர்கள் ஆஜரானார். ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரரின் 25/03/2023 தேதியிட்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு அப்போதைய (25/03/2023 தேதிய) பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.M.சந்திரன் அவர்கள் (தற்போது) துணை வட்டாட்சியர், தேர்தல், தேன்கனிக்கோட்டை வட்டம், மனுதாரருக்கு எவ்வித தகவலும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, மேற்குறிப்பிட்ட திரு. திரு.M.சந்திரன் மீது பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் மூலமாக ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. தற்போதைய பொதுத் தகவல் அலுவலர், மேற்குறிப்பிட்ட காரண விளக்கத்தை பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பணிக்கப்படுகிறார்.

3. இன்றைய விசாரணையின் போது, பொதுத் தகவல் அலுவலர் 16/12/2024 தேதியிட்டு இனம்வாரியான தகவல்களை மனுதாரருக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. மனுதாரர் புகார் மனு அனுப்பியிருப்பதால், முன்னாள் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து காரண விளக்கம் கிடைக்கப் பெற்றவுடன், ஆணையம் அதனை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்யப்படும்.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ ஃதர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 1646/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1. பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.

2. திரு.M.சந்திரன்
முன்னாள் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
(தற்போது) துணை வட்டாட்சியர் (தேர்தல்)
தேன்கனிக்கோட்டை வட்டம்.

**புகார்தாரர்**

திரு.க.சுரேஷ்பாபு, த/பெ.ஆர்.கண்ணன்
226, கோவிந்தராஜபுரம் (விரிவாக்கம்)
தாம்சன்பேட்டை,
காவேரிப்பட்டணம் - 635 112
கிருஷ்ணகிரி வட்டம் (ம) மாவட்டம்.

நகல்.
1.மாவட்ட ஆட்சித் தலைவர்.
மாவட்ட ஆட்சித் அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்.

2. பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35 (for follow up)

RG/PC